

கழக இளைஞரணி செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு திருவள்ளூர் மத்திய மாவட்டம் பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் வயலாநல்லூர் மற்றும் கோலப்பாஞ்சேரியில் ஒன்றிய கழக செயலாளர் பூவை.ப.ச.கமலேஷ் தலைமையில் ஊராட்சி மன்ற தலைவர்கள் டி.துரைமுருகன், சி.விஜயபாபு கிளை கழக செயலாளர் ஆனந்த் ஆகியோர் ஏற்பாட்டில் முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழக செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ கழக கொடியேற்றி பொதுமக்களுக்கு மற்றும் பள்ளி விடுதி மாணவ மாணவிகளுக்கு அறுசுவை உணவு வழங்கினார் அருகில் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், எம். முத்தமிழ்செல்வன் வி. குமார், ஜி.விமல் வர்ஷன், ஆவடி மாநகரக் கழக பொறுப்பாளர் சன் பிரகாஷ் பகுதிகழக செயலாளர் நாராயண பிரசாந்த், ஒன்றிய குழு துணைத் தலைவர் பரமேஸ்வரி கந்தன், ஒன்றிய நிர்வாகிகள் ஆ.ஜனார்த்தனன், எம். இளையான் வயலை பிரபாகரன், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் டி.குமரேசன், ஏ.ஜி. ரவி, திருமலைராஜ், என்.சண்முகம், ஏ.எஸ்.மோகன், பேட்டை கேசவன், பரிமேலழகன், உள்பட பலர் உள்ளனர்

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

# பழைய பெருங்களத்தூர் சாரதா சக்தி ஆசிரமத்தில் அறுசுவை உணவு!

## கே.எஸ்.சிப்ஸ் மணி ஏற்பாட்டில் - டி.காமராஜ் எம்.சி.வழங்கினார்!

தாம்பரம். டிச.1

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக வர்த்தக அணி சார்பில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு பழைய பெருங்களத்தூர் காமராஜர் நெடுஞ்சாலையில் உள்ள சாரதா சக்தி பீடத்தில் மாணவ - மாணவிகளுக்கு அறுசுவை உணவு மற்றும் புத்தகங்கள், பேனாக்களை மாவட்ட வர்த்தக அணித் தலைவர் கே.எஸ்.சிப்ஸ் மணி ஏற்பாட்டில் வழங்கப் பட்டது.

இந்நிகழ்ச்சிக்கு 53 வது மாமன்ற உறுப்பினர் டி.ஆர் கோபி தலைமை வகித்தார்.

மாணவ, மாணவிகளுக்கு அறுசுவை உணவு மற்றும் புத்தகங்கள், பேனாக்களை தாம்பரம் மாநகரம் 4 வது மண்டலக் குழுத் தலைவர் டி.காமராஜ் வழங்கி நிகழ்ச்சியை துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் 55 வது மாமன்ற உறுப்பினர் பி.புகழேந்தி மற்றும் பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் பலர் கலந்து கொண்டனர்.



தலைமைச் செயலகத்தில் தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, தலைமையில் (29.11.2023) அன்று கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுகள் – 2023 போட்டியை தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, திருச்சி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நான்கு இடங்களில் 2024–ஜனவரி 19 முதல் 31–ஆம் தேதி வரை நடத்துவது தொடர்பான முதல் செயற்குழு மற்றும் ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தொடர்புடைய அரசுத் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் - வி.பி.கலைராஜன் சிறப்புரை! கலைஞர் நூற்றாண்டு விழா!

# சென்னை தெற்கு மாவட்ட இலக்கிய அணி சார்பில் பல்வேறு நிகழ்ச்சிகள்!

## கொட்டிவாக்கம் எம்.பார்த்திபன் தலைமையில் நடந்த கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, டிச. 1-

சென்னை தெற்கு மாவட்ட இலக்கிய அணியின் ஆலோசனைக் கூட்டம் சென்னை தெற்கு மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் கொட்டிவாக்கம் எம் பார்த்திபன் தலைமையில் 29.11.2023 அன்று மாலை 4 மணி அளவில் மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது .

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் மா. சுப்பிரமணியன் மற்றும் மாநில இலக்கிய அணி செயலாளர் வி பி கலைராஜன் ஆகியோர் பங்கேற்று பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்கள் .

இந்த இனிய நிகழ்வில் மாவட்ட கழக அவைத் தலைவர் எஸ் குணசேகரன், மாவட்டத் துணைச் செயலாளர்கள் பாலவாக்கம் தா .விஸ்வநாதன், பாலவாக்கம் மு. மனோகரன், வாசுகி பாண்டியன், வேளச்சேரி எஸ். பாஸ்கரன் உள்ளிட்ட மாவட்ட நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன .

கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மருத்துவ முகாம் மற்றும் மரம் நடு விழாவை மிகச் சிறப்பாக நடத்துவது என்றும்,

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கலைஞரின் வாழ்க்கை வரலாறு புத்தகம் கல்லூரி மாணவர்களுக்கு வழங்குவது என்றும்,

நீட் தேர்வுக்கு எதிர்ப்பான கையெழுத்து இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்றிய இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு இலக்கிய அணி சார்பாக பாராட்டுகளை தெரிவிப்பது என்றும்,

இலக்கிய அணியின் சார்பாக சென்னை தெற்கு மாவட்டத்தில் உள்ள ஐந்து சட்டமன்ற தொகுதிகளிலும் தொடர்ச்சியான நிகழ்ச்சிகளை நடத்துவது என்றும் இளைஞர் அணி மாநாடு மிகச் சிறப்பாக வெற்றியடைய வாழ்த்துக்கள் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள் உள்ளிட்டோர் நிவராணப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்ற முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கு இணங்க, எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் இ.பரந்தாமன், எழும்பூர் தொகுதி, 77 மற்றும் 78–வது வட்டங்களில் மழையால் பாதிக்கப்பட்ட சண்டியப்பா தெரு, குழந்தை தெரு, அய்யாவு தெரு, முனுசாமி தெரு, காட்டூர் நல்லமுத்து தெரு, டிமலஸ் ரோடு, டி.கே.தெரு, வீ.வீ.கோவில் தெரு, சொக்கவேல் சுப்பிரமணியம் தெரு, குறவன் குளம் ஆகிய பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டு, நிவாரண நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். மேலும், 77ஆவது வட்டத்தைச் சேர்ந்த தட்டாங்குளம் காட்டூர் நல்லமுத்து தெரு, அய்யாவு தெரு, முனுசாமி தெரு ஆகிய தெருக்களைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு வழங்கினார்.

## டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை ! பட்டூர் எஸ்.ஜபருல்லா தலைமை!

# மாங்காடு நகர் இளைஞர் அணி நிர்வாகிகள் - தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## படப்பை ஆ.மனோகரன் - வே.உமாகாந்த் பங்கேற்பு! ஆர்.சாரதி அறிவிப்பு!

காஞ்சிபுரம், டிச.1

மாங்காடு நகர தி.மு.க இளைஞர்அணி நிர்வாகிகள் மற்றும் பூத் அளவில் போடப் பட்டுள்ள பி.எல்.ஏ.2 இளைஞர்அணி தகவல்தொழில்நுட்பஅணி தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் ஆலோசனைக்கூட்டம் 2.12.2023, சனிக்கிழமை, மாலை 5.30 மணியளவில் அன்னை அபிராமி திருமண மண்டபம், மாங்காட்டில் நகர கழகச் செயலாளர் நகர மன்ற துணைத் தலைவர் பட்டூர் எஸ்.ஜபருல்லா தலைமையில் தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் எம்.ஆர்.சீனிவாசன், மாவட்டப்பிரதிநிதி ஜி.ராமு ஆகியோர் வரவேற்புரையில் மாங்காடு நகர கழக நிர்வாகிகள் எம்.எஸ். மகேந்திரன், ஜி.எம். வில்லியம்ஸ், சுசீலா இராதாகிருஷ்ணன், கே.ஜி.சங்கர், எம்.வீர ராகவன், நகர இளைஞ ரணி நிர்வாகிகள் என்.ஜியாவுதீன், சேரன்கதிர், எஸ்.ஜீவா, என்.ரமேஷ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளர்களாக கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., குறுசிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் அமைச்சர் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.மோ.அன்பரசன், ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன், தொகுதி பார்வையாளர் வே.உமாகாந்த் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை கள் வழங்கி சிறப்பிக்க உள்ளனர்.

மேலும் இக்கூட்டத்தில் மாவட்டப்பிரதிநிதிகள் ஆர்.பாஸ்கரன், ஏ.கே.அப்துல்ரஹ்மான், எம். ஆர். வெங்கடேசன், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் எம்.எஸ்.கதிரவன், டி.பெருமாள்ராஜ், மருத்துவர். க.ராஜேஷ்,

ஜி.ஞானவேல், செல்வராஜ், சரளாவிஜயகுமார், எஸ்.நளினி, நகர மன்ற உறுப்பினர்கள் சாந்தி சம்பத்,ராம்பியாரி லட்சுமணன், சரிதா ஞானவேல், கா.மு.இஸ் மாயில், சி.தனசேகர், மேனகாகணபதி, அனுசுயாசத்தியசீலன், சரஸ்வதிசீனிவாசன், மோசினாஅபிபுர்ரஹ்மான், யாஸ்மின் ஜப ருல்லா, வார்டு கழக செயலாளர்கள் எஸ். துரை, எம்.சம்பத், ஆர்.எம். விஜயகுமார், பி.அவினாஷ், ஜெ.கனக ராஜ், ஜி.செல்வம், வி.பிரகாஷ் எம்.பிரபு, தக்க ஜி.மகாலிங்கம், எஸ். ராஜசேகர், எஸ்.ஸ்ரீதேவி சத்யா, பி.முருகையன், கா.மு. இஸ்மாயில், டி. கணேஷ், ஜி.ராஜசேகர், எம்.சரவணன், என். சுந்தரமூர்த்தி, எம்.எம்.கணபதி, ஆர்.தனசேகர், டி. ராஜேஷ், பி.வெங்கடேசன், எம்.தியாகராஜன், எம். ஜெ.ரகு, எம்.எஸ்.ரகு, பி.இஸ்மாயில், எம்.கே. பாரூக், வி.புருஷோத்தமன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

எம்.வல்லரசு, ஏ.ராஜு, பி.கௌதம், எஸ்.அக்ரம், வி.நவீன், ஆர்.கலை யரசன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

டிசம்பர்17 சேலத்தில் இளைஞர்அணி மாநில மாநாடு, பூத்வாரியாக வழங்கப்பட்டுள்ள வாக்காளர்களின் குடும்பவிவர படிவங்கள் மற்றும் வீடுவாரியாக கணக்கெடுப்பு பூர்த்தி செய்வது தொடர்பாக ஆலோசிக்கவுள்ள இக்கூட்டத்தில் நகர கழக நிர்வாகிகள், வார்டு கழக நிர்வாகிகள், நகர மன்ற உறுப்பினர்கள், அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர் கள், வாக்குச்சாவடி பாக முகவர்கள் என அனை வரும் தவறாமல் கலந்து கொண்டு இக்கூட்டத்தினை சிறப்பித்துத்தருமாறு நகர இளைஞர் அணி அமைப்பாளர் ஆர். சாரதி கேட்டுக்கொண்டுள்ளார்.



பெருநகர சென்னை மாநகராட்சி திரு.வி.க. நகர் மண்டலம் ஜமாலியா நெடுஞ்சாலையில் தேங்கியுள்ள மழை நீரை அகற்றும் பணிகளை மேயர் பிரியா பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு மழைநீர் அகற்றும் பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். தொடர்ந்து, பக்கிங்ஹாம் கால்வாயினையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே.பி.என். மாயன்

### டிசம்பர் 1 (2013)



கொடைக்கானல் நகரச் செயலாளராக தொடர்ந்து 38 ஆண்டுகள் சிறப்புறப் பணியாற்றியவர். திண்டுக்கல் மாவட்ட தி.மு.க. பொறுப்புக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

'மிசா' சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறை வாசமும் – இந்தி எதிர்ப்பு, சட்டநகல் எரிப்பு, ஈழத் தமிழர் ஆதரவு ஆகிய போராட்டங்கள் மற்றும் கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

கொடைக்கானல் நகராட்சி, நகரியக் குழு உறுப்பினராகவும், கொடைக்கானல் கூட்டுறவு பண்டகசாலைத் தலைவராக இரண்டு முறையும் – கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தின் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## சிவகங்கையில்

# ரூ.3.50 கோடியில் 100 தினசரி சந்தைக் கடைகள்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பணிகளை துவக்கி வைத்தார்!

சிவகங்கை, டிச. 1-

சிவகங்கை மாவட்டம் சிவகங்கை நகராட்சி சார்பில் தினசரி சந்தைக்கான கட்டிட பணிகள் துவக்க விழா மாவட்ட ஆட்சியர் திருமதி.ஆஷா அஜித் தலைமையில் நடைபெற்றது. கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூபாய் 3 கோடியே 49 லட்சத்தில் 100 கடைகள் கட்டுவதற்கான பணிகளை கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

இந்த தினசரி சந்தையில் கேண்டீன் வசதி, இருசக்கர வாகனங்கள் நிறுத்தும் வசதி, மற்றும் கழிப்பறை வசதியுடன் 100 கடைகள் கட்டப்பட உள்ளது.

இந்த நிகழ்ச்சியில் நகர்மன்ற தலைவர் துரை.ஆனந்த் வரவேற்றுப் பேசினார். நிகழ்ச்சியில் கோட்டாட்சியர் சுகிர்தா, மாவட்ட கழக துணைச் செயலாளர் கே. எஸ். எம்.மணிமுத்து, நகர்மன்ற உறுப்பினர்கள் அயூப்கான், ஜெயகாந்தன், விஜயகுமார், சரவணன், கார்த்தி முருகேசன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்குமார், துணை அமைப்பாளர்கள் ராஜாஅமுதன், பி.முகமதுகனி, வழக்கறிஞரணி பாஸ்கரன், ஒன்றிய துணைச் செயலாளர் முத்துக்குமார், ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் சிங்கமுத்து, மகளிர் அணி மஞ்சுளா, நகர் மன்ற துணைதலைவர் கார்கண்ணன் மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் தனசேகரன் மாவட்ட கவுன்சிலர் ஏ.டி.என்.ரவி ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

நகர்மன்ற உறுப்பினர் அயூப் கான் நன்றி கூறினார்.

# ஒழுங்கு நடவடிக்கை!

## தலைமைக் கழக அறிவிப்பு!

தேனி தெற்கு மாவட்ட துணைச் செயலாளர் குரு.இளங்கோ கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப் படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள் : 30.11.2023

**துரைமுருகன்,**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா பா. நாகலிங்கம்

### டிசம்பர் 1 (2006)



கழகத்தில் 1953ஆம் ஆண்டு உறுப்பினராகி பின்னர், 1957 முதல் 1967 வரை பொன்னேரி வட்டக் கழகப் பொருளாளராகப் பணியாற்றினார்.

1967 மற்றும் 1971 ஆகிய இரண்டு முறை பொன்னேரி சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்று, தொகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம், மும்முனைப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

நெருக்கடிகாலத்தில் 'மிசா' கைதியாக சிறைவாசம் அனுபவித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**